# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.07/2024 | Date: 21.08.2025 |
| Deposition of Witness for | : | பு.சா.1 | |
| Name | : | தாசசேகரன் | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) எதிரியின் மனைவி மற்றும் குழந்தைகளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். எதிரியின் வீடு என்ன மாதிரியான வீடு என்றால் குடிசை வீடு. எதிரியின் வீட்டிற்கு எத்தனை முறை சென்றுள்ளேன் என்றால் 2-3 முறை சென்றுள்ளேன். கடந்த 02-05-2023 ம் தேதி தான் எதிரி என்னிடம் கடன் கேட்டாரா என்றால் இல்லை, அதற்கு முன்பே சுமார் 20 நாட்களுக்கு முன்பு கேட்டார். எதிரி 20 நாட்களுக்கு முன்பே கடன் கேட்டதாக நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) இவ்வழக்கு கடன் தொகை தவிர எனக்கும், எதிரிக்கும் வேறு எந்த பணபரிவர்த்தனை இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலை தவிர வேறு ஏதேனும் ஆவணத்தை நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடனுக்கு ஆதரவாக பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இந்தியன் வங்கி, தேவூர் கிளை மற்றும் குமாரபாளையத்தில் உள்ள SBI வங்கி ஆகிய வங்கிகளில் கணக்குகள் உள்ளன, மேற்படி, இரண்டு வங்கி கணக்குகளின் எண்களை கொடுக்க தயாராக உள்ளேன்.

3) நான் இவ்வழக்கு காசோலை தவிர எதிரியின் வங்கிக்கு உரிய காசோலைகள் எதையும் நான் எனது வங்கி கணக்குகள் உள்ள வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி, வங்கிகளின் வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஆமாம். எதிரி என்னிடம் கடன் ்கேட்டதாக சொல்லப்படும் தேதிக்கும், கடன் கொடுத்ததாக சொல்லப்படும் கடந்த 02-05-2023 ம் தேதிக்கும் இடையே எதிரியை நான் சந்தித்தேனா என்றால் நான் தினந்தோறும் சந்திப்பேன்.

4) இவ்வழக்கு காசோலை நான் கேட்டுகொண்டதற்காக எதிரி கொண்டுவந்தாரா என்றால் ஆமாம். இவ்வழக்கு காசோலையை நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல, எதிரி என்னிடம் காசோலையை கொடுக்கும்போதே என்முன்னிலையில் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி என்ன நிறத்தினால் ஆன பேனாவினால் பூர்த்தி செய்தார் என்றால் புளூ கலர் மையினால் பூர்த்தி செய்து கொடுத்தார். நான் பணம் கொடுத்தவுடனே காசோலை என்னிடம் கொடுத்தாரா என்றால் ஆமாம்.

5) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த Collection slip ஐ யார் பூர்த்தி செய்தது என்றால் நான் தான் புளூ கலர் மையினால் பூர்த்தி செய்தேன். இவ்வழக்கு காசோலையும், Collection slip ம் ஒரே நபரால், ஒரே மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஏலச்சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Sd/-S.Sathiya,

Sd/-Dhasasekaran

Judicial Magistrate No.1,

Sankari.